# இந்தியா-தென் ஆப்ரிக்கா கூட்டு அமைச்சர்களுக்கான ஆணைக்குழுவின் 9 வது அமர்வு (JMC)

**மே 19,2015**

1.இந்தியா-தென் ஆப்ரிக்கா கூட்டு அமைச்சர்களுக்கான ஆணைக்குழுவின் 9 வது அமர்வு (JMC) 19 மே 2015 அன்று டர்பனில் நடைபெற்றது. அதில் வெளியுறவு அமைச்சர் செல்வி மைட் கோயானா மாஷாபனே மற்றும் வெளிவிவகார அமைச்சர் மற்றும் வெளிநாட்டு இந்திய விவகாரங்களுக்கான திருமிகு சுஷ்மா சுவராஜ் இணைத் தலைமை தாங்கினர். இந்த அமர்வின் கீழ் 7 உபகுழுக்களில் இருந்து அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

2. இந்த அமர்வு மிகவும் விளைவு சார்ந்ததாக அமைய, ஒரு ஐந்து ஆண்டு மூலோபாய கட்டமைப்பு கீழ் ஒத்துழைப்பு திட்டத்தினை செயல்படுத்த அமைச்சர்கள் பணி செய்ய ஒப்புக்கொண்டனர். அவர்கள் ஒத்துழைப்பு தொடர்பாக பின்வரும் முன்னுரிமை பகுதிகளை கண்டறிந்தனர்:பாதுகாப்பு, ஆழமான சுரங்க தொழில், விஞ்ஞானம், தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல் மற்றும் காப்பீடு ஆகும். இதற்கு வசதியாக செய்ய வர்த்தக மற்றும் பொருளாதார விஷயங்கள் குறித்து ஒரு புதிய கூட்டு செயற்பாட்டுக் குழு ஸ்தாபிக்கப்படும்.மேலும்,இந்திய-தென் ஆப்ரிக்கா விருப்பு வர்த்தக ஒப்பந்தம் (பிடிஏ)வில் பேச்சுவார்தைகள் தொடுங்குவதையும் தென் ஆப்பிரிக்க பக்கம் வலியுறுத்தியது. இந்தியத் தரப்பு இதனை வரவேற்றது. இந்த விஷயத்தில் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படும்.

3.அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக ஒரு புதிய உபகுழு அமைக்கப்படும் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) ஒத்துழைப்பு ஊக்குவிக்கபாடவும் முடிவு செய்யபட்டது.

4. இந்த அமர்வுக்கு முன்னரே திருமதி சுஷ்மா ஸ்வராஜ் ஜனாதிபதி ஜேக்கப் ஜுமாவினை சந்தித்தார் மற்றும் புது தில்லியில் அக்டோபர் 2015 ல் மூன்றாவது இந்தியா-ஆப்பிரிக்கா கருத்துக்களம் உச்சி மாநாட்டில்(IAFS-III,) கலந்து கொள்ள ஜனாதிபதி ஜேக்கப் ஜுமாவிற்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அழைப்பினை தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர், வெளிநாட்டு அமைச்சர் மாஷாபனேவிற்கும் அதே அழைப்பினை நீட்டித்தார். ஜனாதிபதி ஜுமா மற்றும் அமைச்சர் மாஷாபனே இருவரும் தங்கள் பாராட்டினை தெரிவித்தத்தோடு அவர்கள் ஒரு வெற்றிகரமான உச்சிமாநாட்டினை எதிர்நோக்குகி இருப்பதை வெளிக்கூறினர்.

5. அமைச்சர் மாஷாபனே தென்னாப்பிரிக்கா அணு குழுவில் (NSG) இந்தியா உறுப்பினராக இருப்பதற்கு ஆதரவினை உறுதியளித்தார்.

6. பிரிக்ஸ், டிபிஎஸ்ஏ, IORA பயங்கரவாத சைபர் பாதுகாப்பு, பன்னாட்டு நிறுவனங்களில் சீர்திருத்தம், குறிப்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் உட்பட பிராந்திய மற்றும் பலதரப்பு பிரச்சினைகள் குறித்து இரண்டு அமைச்சர்களும் கலந்துரையாடினர். அவர்கள், ஐ.நா. பாதுகாப்பு சபையில் அவசர சீர்திருத்தம் வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு, 2015, ஐக்கிய நாடுகள் சபையின் 70 வது ஆண்டு நிறைவினை வெளிக்கொணர்வதால், சீர்திருத்த செயல்முறையினை துரிதப்படுத்த ஒரு உறுதியான முடிவை நோக்கி பணி செய்ய ஒரு தனித்துவமான வாய்ப்பினை இது வழங்கும் என கூறினர்.

7. அமைச்சர் சுவராஜ் மற்றும் அமைச்சர் மாஷாபனே 2017இல் பரஸ்பரம் வசதியான தேதிகளில் இந்தியாவில் கூட்டு அமைச்சர்களுக்கான ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத் நடத்த முடிவு செய்தனர்.

**டர்பன்,**

**மே 19,2015**